# MOTOR VEHICLE ACT

1. Rash and negligence driving endangering of human life : 279 IPC
2. Injuries (Simple) : 337 IPC Injuries (Grievous) : 336 IPC
3. Fatal Accident (Causing death): 304(A) IPC

**TRAFFIC OFFENCES UNDER THE MOTOR VEHICLES ACT :**
**மோட்டார் வாகன சட்டப்படி குற்றம்**

1. No Parking and one way : 115/194 MV Act
   ஒரு வழிப்பாதை, வண்டி நிறுத்தக்கூடாது
2. Traffic Obstruction/ Middle of road : 122/177 MV Act
   போக்குவரத்துக்கு தடை செய்வது
3. Records not produced : 130/177 MV Act
   ஆவணங்கள் இல்லை
4. No uniform, Driver & conductor: 8 PMVR r/w MV Act.
   சீறுடை இல்லை
5. Over Load : 113/194 MV Act
   அதிக பளு ஏற்றுதல்
6. Without Driving Licence: 3/181 MV Act
   ஓட்டுநர் உரிமம் இல்லை
7. Allowing persons without DL5/181 MV Act
   ஓட்டும் உரிமம் இல்லாதவரை ஓட்ட சொல்வது
8. Age limit without DL: 4/181 MV Act
   ஓட்டும் உரிமம் வயதின்மை
9. No bulb horn:119(2) CMVR r/w 177 MV Act
   பல்ப் ஹாரன் இல்லாமை
10. Used Air Horn :190 MV Act
    ஏர் ஹாரன் உபயோகிப்பது
11. No number plate : 205(2) r/w 177 MV Act
    நம்பர் பிளேட் இல்லாமை

12. No Medicine in First-Aid Box :175 PMVR r/w 177 MV Act
முதலதவி பெட்டியில் மருந்து இல்லாமை

13. Over Smoke : 190/177 MV Act
அதிக புகை கக்குதல்

14. Disobey Traffic Signal : 199/177 MV Act
போக்குவரத்து சைகையை மீறுதல்

15. Head Light not burning :105 CMVR r/w 177 MV Act
விளக்கு எறியாமை

16. "U" Turn: 119 r/w 177 MV Act
'U' வளைவில் விதியை மீறி நடத்தல்

17. Indicator not burning : 103 CMVR r/w 177 MV Act
இண்டிகேட்டர் வேலை செய்யாமை

18. Triples riding cycle holding : 128/177 MV Act
மூன்று பேர் சைக்கிள் ஓட்டுவது

19. Drunken Drive :185 MV Act
போதையில் வண்டி ஓட்டுவது

20. No side mirror : 134 CMVR r/w 177 MV Act
பக்க கண்ணாடி இல்லாமை

21. Dangerous drive: 184 MV Act
ஆபத்தான முறையில் வண்டி ஓட்டுதல்

22. Insurance not valid: 140 r/w 196 MV Act
வண்டிக்கு இன்சூரன்ஸ் இல்லாமை

23. Sitting near seat (driver back door opened):125 r/w 177 MV Act
ஓட்டுனர் பக்கத்தில் உட்கார

24. Meter not operated : 10(2) PMVR r/w 177 MV Act
மீட்டர் வேலை செய்யாமை

25. Over speed: 183 MV Act
அதிக வேகம்

26. Traveling Foot Board : 123/177 MV Act
மிதிப்படியில் பயணம் செய்தல்

27. Without permit : 56/192 MV Act
பெர்மிட் இல்லாமை

28. No R.C ( Registration Certificate) : 39/192 MV Act
பதிவு இல்லாமை

29. Driver not signaling :121/177 MV Act
ஓட்டுனர் சைகை காட்டாமை

30. Without stephanis :170 MV Act
வண்டியில் ஸ்டெப்னி இல்லாமை

31. Over height lorry :198 PMVR
அதிக உயரச் சுமை

32. Disobey Traffic Signal: 179/177 MV Act
டிராபிக் சைகையை மீறுதல்

33. Trip sheet not maintained : 71 PMVR r/w 177 MV Act
ட்ரிப் ஷீட் இல்லாமை

34. ‘L’ Board not fixed: 3(A) r/w 187 MV Act
‘L’ போர்டு இல்லாமை

35. Without Batch : 72/177 MV Act
பேட்ச் இல்லாமை

36. Allowing person in cabin : 95 PMVR r/w 177 MV Act
கேபினில் பயணிகளை அனுமதித்தல்

37. No Parking light : 109 MV Act
பார்க்கிங் விளக்கு இல்லாமை

38. Over load – 113/194 MV Act
அதிக சுமை

39. Self motor not functioning : 117(1) r/w 177 MV Act
செல்ப் மோட்டார் வேலை செய்யாமை

40. Without Silencer : 120 r/w 177 MV act
சைலன்ஸ்சர் இல்லாமை

41. Taxi and own number Plate: 123(3) r/w 177 MV Act
டாக்ஸி நம்பர் இல்லாமை

42. Wrong over taking :125/177 MV Act
ஓவர் டேக்கிங் செய்தல்

43. Without Helmet: 129/177 MV Act
ஹெல்மட் இல்லாமை

44. No shaving Driver and Conductor C:174 MV Act
டிரைவர், கண்டக்டர் சவரம் செய்யாமை

45. Owner of the vehicle allowed unauthorized to drive the vehicle :180 MV Act
வண்டி உரிமையாளர் ஓட்டுநர் உரிமம் இல்லாதவரிடம் ஓட்ட செய்தல்

46. After the accident driver runway with vehicle :187 MV Act
விபத்து நடந்த பிறகு டிரைவர் இடத்தை விட்டு ஓடி விடுதல்

(1) Sec. 207. Power to detain vehicle. When ?
எப்போது வாகனத்தை கைப்பாற்றலாம்?

1. Without permit (ஓட்டுனர் உரிமம் இல்லாதபோது)
2. Driving Licence ( ஓட்டுனர் உரிமம் இல்லாதபோது)
3. பதிவு சான்றிதழ் இல்லாத போது
4. Permit of Route condition (பதிவு தடங்கள் இல்லாத பாதையில் செல்லும் போது

(2) Power to arrest without warrant (பிடிக்கக் கூடிய குற்றங்கள்)
Following offences are cognizable under the MV Act

Dangerous Drive( பிரிவு 184) ஆபத்தான முறையில் வண்டி ஓட்டுவது) –

Drunken Drive ( பிரிவு 185) குடிபோதையில் வண்டி ஓட்டுவது

Taking vehicle without authority (without consent of the owner or with force) (பிரிவு - 197) -
வண்டி உரிமையாளரின் உத்திரவு இல்லாமல் வண்டியை எடுத்துச் செல்லுதல் -

# மோட்டார் வாகனச் சட்டம் , 1988
# இயக்கஊர்திகள் சட்டம், 1988

1. காண்டிராக்ட் ஊர்திகள் என்பது பயணிகளை வாடகைக்கு ஏற்றி செல்வதாகும் ஒரு குறித்த தொகைக்கு ஏற்றி செல்வதும் கீழ்கண்டவாறு அமைந்திருப்பதும் ஆகும்-

அ) குறிப்பிட்ட காலத்தின் அடிப்படையில்
ஆ) ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து இன்னொரு குறிப்பிட்ட இடத்திற்கு மட்டும்
இ) மாக்சிகேப் வண்டிகள்
ஈ) மோட்டார் கேப் வண்டிகள்

2. ஒப்பந்த ஊர்திகளுக்கும் ஸ்டேஜ் ஊர்திகளுக்கும் (பஸ்)உள்ள வேற்றுமைகள் -

அ) ஒப்பந்த வண்டிகள் பயணிகளை ஏற்றுவதற்கு குறிப்பிடாத தடங்களில் நிறுத்தக் கூடாது.

ஆ) தட வண்டிகள் (பேருந்து) பல தடங்களில் பயணிகளை ஏற்றிக் கொள்ள நிறுத்தலாம்.

3. பொது இடம் என்பது ரோடு, தெருவு, வழி அல்லது மற்ற இடங்கள் அங்கு பொதுஜனம் நடமாடும் இடமாகும்.

4. ரூட் அல்லது தடங்கள் என்பது இயக்கூர்திகள் போகும் பாதையும் தேசிய நெடுஞ்சாலையையும் குறிக்கும்.,

5. போக்குவரத்து வண்டிகள் என்பது பொதுசேவை வண்டிகளையும், பொருட்களை ஏற்றி செல்லும் லாரி போன்ற வாகனங்களையும் கல்வி மற்றும் தனியார் இயக்கூர்திகளையும் குறிக்கும்.

6. வெற்றிட கனம் (unload weight) என்பது ஒரு வண்டியின் மற்றும் அந்த வண்டி சம்பந்தப்பட்ட பாகங்கள் அடங்கியதும் டிரைவர் மற்றும் கண்டக்டர்கள் கனத்தை சேர்க்காததும் ஆகும்.

7. ஒரு இயக்கூர்திகள் ஓட்ட தேவையானது டிரைவிங் லைசன்ஸ் ஆகும்.

8. ஒரு இயக்கூர்தியை ஓட்ட டிரைவிங் லைசன்ஸ் கொடுக்கப்பட வேண்டியவர் 18 வயதுக்கு கீழ் இருக்கக்கூடாது.

9. எந்த ஒரு இயக்கூர்தியையும் பதிவு சான்றிதழ் இல்லாமல் இயக்கப் பட கூடாது.

பிரிவு-19: மோட்டார் வாகன ஓட்டிகள் தானியங்கி போக்குவரத்து சைகை விளக்குகள் காட்டும் சைகைப்படியும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் காவலரது சைகைப்படியும் வண்டியை ஓட்டுதல் வேண்டும்.

**மூன்று வகையான போக்குவரத்து சைகைகள் உள்ளன.**

1. கட்டளை சைகை
2. எச்சரிக்கை சைகை
3. தகவல் சைகை

1. **கட்டளை சைகை:** என்பது சட்டப்படி விதிக்கப்பட்டு அதை மீறுபவர்கள் தண்டனைக்குரிய குற்றம் செய்ததாக பொருள். உதாரணம் நில், வழிவிடு, ஒருவழிபாதை, வழியில்லை, மாட்டுவண்டி மட்டும் போகக்கூடாது, வலது, இடது மற்றும் 'U' வடிவ திருப்பம் செய்யக்கூடாது என்பன.

2. **எச்சரிக்கை சைகை :** ஒருவர் வாகனம் ஓட்டிச் செல்லும் போது கவனமாக செல்ல வேண்டும் இல்லையேல் சாலை விபத்து நடக்க நேரிடலாம் என்பதனை எச்சரிக்கை செய்வதற்காக உதாரணம்: வலது, இடது பக்க வளைவு, கொண்டைஊசி வளைவு, குறுகிய பாதை, சைக்கிள் கடப்பது, பள்ளிச்கூடம் அருகில், ரவுண்டானா, பாதுகாக்கப்படாத இரயில்வே கேட் என்பன.

3. **தகவல் தரும் சைகை :** ஒரு வாகன ஓட்டுனருக்கு திசையையும் தூரத்தையும் மற்ற தகவல்களையும் சாலையில் தருவது. உதாரணம் திசை, தொலைபேசி, பெட்ரோல் பேங்க் , மருத்துவமனை, முதலுதவி, உணவருந்துமிடம் என்பன.

பிரிவு-122 : எந்த ஒரு வாகனத்தையும் ஆபத்தான நிலையில் வைத்திருக்க கூடாது.

பிரிவு-123: வாகனத்தின் உட்புறம் தவிர, மிதிப்படியிலோ வாகனத்தின் மேற்கூரையிலோ அல்லது வேறு எந்த பாகத்திலோ பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடாது.

பிரிவு-124: பயணச்சீட்டு மற்றும் பயணச்சலுகை அட்டையில்லாமல் வெறும் வாகனத்தில் பயணம் செய்யக் கூடாது.

பிரிவு-125: வாகன ஓட்டி வாகனத்தை ஓட்டுவதற்கு இடஞ்சலாக எந்த ஒரு நபரையும் தன் அருகில் நிற்பதற்கோ அல்லது அமர்வதற்கோ அல்லது எந்த பொருளையும் தன் அருகில் வைப்பதற்கும் அனுமதிக்கக்கூடாது.

பிரிவு-126: எந்த ஒரு வாகன ஓட்டியும் தன்னுடைய வாகனத்தை ஒரே இடத்தில் நிறுத்தி வைக்கக்கூடாது. அவ்வாறு நிறுத்தி வைக்க நேர்ந்தால் ஓட்டுநர் உரிமம் பெற்ற ஒரு நபரின் பொறுப்பிலோ அல்லது வாகனத்தின் இயந்திர ஓட்டத்தை நிறுத்தியோ அல்லது தேவையான தடையை ஏற்படுத்தியோ அவ்வாகனத்தால் பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படாவண்ணம் நிறுத்தி வைக்க வேண்டும்.

பிரிவு-130: மோட்டார் வாகன ஓட்டுநர் அல்லது நடத்துனர் சீறுடையில் உள்ள காவலர் உரிமத்தை தணிக்கை செய்ய வேண்டி கேட்கும் போது காண்பிக்க வேண்டும். வாகன உரிமையாளரோ அல்லது ஓட்டுநரோ வாகனத்தின் பதிவு மற்றும் தகுதி சான்றிதழ்களை தணிக்கை செய்யும் அலுவலர் கேட்கும் போது காண்பிக்க வேண்டும்

பிரிவு-131: மோட்டர் வாகன ஓட்டுநர் ஒரு ஆளில்லாத இரயில்வே கேட்டை தாண்டும்போது இறங்கி சுற்றும் முற்றும் பார்த்து இரயில் அல்லது டிராலி வருகிறதா என்று பார்த்து பிறகு வாகனத்தை ஓட்டி செல்ல வேண்டும்.

பிரிவு-132: ஒரு மோட்டார் வாகன ஓட்டுநர் சீறுடையில் உள்ள காவலர் வாகனத்தை நிறுத்தி வைத்தாலும் அல்லது வாகனத்தைக் கண்டு ஒரு மிருகம் அரண்டு கட்டுக்கடங்காமல் போய்விடும் என்று அம்மிருகத்திற்கு பொறுப்பானவர் கருதும் போது அல்லது வாகனம் ஏதேனும் ஒரு விபத்துக்குள்ளானாலும் அவ்வாகனத்தை அந்த இடத்திலேயே 24 மணி நேரத்திற்கு மிகாமல் நிறுத்தி வைக்கலாம்.

**குறிப்பு:** மோட்டார் வாகன சட்டப்படி ஒரு மிருகம் என்பது குதிரை, மாடு யானை, ஒட்டகம், கழுதை, கோவேறு கழுதை, ஆடுகளைக் குறிக்கும்.

பிரிவு-134: ஒரு விபத்து நடந்தால் ஒரு ஓட்டுநரின் கடமைகள்

அ) காயமடைந்த நபர்களுக்கு மருத்துவ உதவி கிடைக்க உடனே ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஆ) அருகிலுள்ள காவல் நிலையத்திற்கு விபத்து நடந்த 24 மணி நேரத்திற்குள் தகவல் தெரிவிக்க வேண்டும்

இ) வாகன காப்பீட்டு அலுவலருக்கும் தகவல் அளிக்க வேண்டும்

பிரிவு-135: பயணம் செல்லும் சாலைகளில் கீழ்காணும் வசதிகள் செய்து தர வேண்டும்

அ) சாலை விபத்துக்கான காரணங்களை ஆய்வு செய்ய வேண்டும்

ஆ) நெடுஞ்சாலையில் வசதிகள் இருக்க வேண்டும்

இ) சாலை போக்குவரத்து உதவி பூத்துக்கள்

எ) லாரிகள் நிறுத்த இடம்

**இ.பி.கோ-வின்படி விபத்துக்கான உட்பிரிவுகள்**

பிரிவு 279 - அஜாக்கிரதையாக ஓட்டுவது
பிரிவு 337 - விபத்தால் சிறு காயம் ஏற்படுத்துவது
பிரிவு 338 — விபத்தால் பெரும்காயம் ஏற்படுத்துவது
பிரிவு 304A- விபத்தால் மரணம் ஏற்படுத்துவது

&&&&